# பண்படுத்தும் பண்பாட்டுக் கல்வி

**Article Particulars:** Received: 28.03.2018 Accepted: 21.04.2018 Published: 28.04.2018

**ஐ. ச. சுபாஷினி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், யோகமும் மனித மாண்பும் துறை*
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை, தமிழ்நாடு, இந்தியா*

**முனைவர். வெ. இராமதாஸ்**
*துணை பேராசிரியர், யோகமும் மனித மாண்பும் துறை*
*WCSC VISION SKY ஆராய்ச்சி மையம், ஆழியாறு,*
*பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா*

***கட்டுரைச் சுருக்கம்***
*நமது பண்பாடு பழமையானது. அனுபவத்தாலும், பழக்கத்தாலும் வழக்கமாகிவிட்ட வாழ்வியலின் விழுமியங்களின் தொகுப்பே பண்பாட்டுக் கல்வி. நமது வாழக்கையின் நடைமுறையில் நாகரீகம் என கருதி பலவற்றை தவிர்த்து விடுகிறோம். அறிவியல் வளர்ச்சியாலும், ஆடம்பர சூழலின் தாக்கத்தாலும், பண்பாட்டினை நாம் பொருட்படுத்துவதில்லை. இதன் பிரதிபலிப்பே சமுதாயத்தில் ஏற்படும் சிக்கலுக்கு காரணமாகி விடுகிறது. நமது பழம் பெரும் பண்பாட்டின் சிறப்புக்கூறுகளை ஆய்வது கட்டுரையின் நோக்கமாகும்.*
***கருசொற்கள்:*** *பண்பாடு, கல்வி, பண்பாட்டுக்கல்வி, அறநெறி, பண்புகள், வாழ்க்கை.*

---

## முன்னுரை

உயிர்கள் தனது தேவைகளை உணர்ந்து, அறிந்து அவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் தனது அறிவினை தன்னுடைய சிந்தனை ஆற்றல் மூலம் சீரான வியூகம் அமைத்து தனது அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட நிலையில் அறிவில் படிப்படியாக உயர்வு பெற்றன. ஆறறிவு பெற்ற மனிதன் தனியாக இயற்கையோடு ஒத்து வாழ்ந்தான். தேவைகளுக்காக இடம் பெயர்ந்தபோது, மற்றவர்களோடு இணைந்து குழுவானான். இப்பொழுதும் இயற்கையோடு இணைந்து செயல்பட்டான். அன்று முதற்கொண்டு தனது வாழ்க்கையில் ஏற்பட்ட நல்ல மாற்றங்களையும், அதற்கு உதவிய சூழல்களையும் அறிந்து கொண்டு இன்பம் துய்த்தான். கபடமற்ற நிலையில் மனிதனது செய்கைகள் மகிழ்வை மட்டுமே தந்தன. இது இயற்கை சட்ட விதிகளுக்கும், தான் சார்ந்த அமைப்பிற்கும் தீய விளைவுகளை கொடுக்கவில்லை. இதனால் தான் பெற்ற அனுபவங்களை தனது சந்ததியினருக்கும் உணர்த்தி தொடர்ந்து செயல்பட வைத்தான். அந்த அனுபவங்களே விழுமியங்களாக, கலாச்சாரமாக, பண்பாடாக மாறியது. இதன் இன்றைய நிலை கேள்விக்குறியாக சமுதாயத்தின் முன் எழுகிறது. இது குறித்த ஆழ்ந்த பார்வையை நோக்குவோம்.

## பண்பாடு

பண்பாடு என்பது ஒரு சமுதாயம் வாழும் விதத்தை தெளிந்து காட்டும் அடையாளமாகும்.[1] பண்பாடு நம்முடைய அகத்தை சார்ந்தது. சமுதாயத்தில் வாழும் மக்களின் செயல்பாடுகளையும், சிறப்புத் தன்மைகளையும் உலகிற்கு பிரதிபலிப்பது பண்பாட்டின் பெருமை.

விலங்கினத்திலிருந்து வேறுபட்ட மனிதனின் தனித்துவப் பண்புகள் மேம்பட பண்பாடு பெரிதும் உதவுகிறது. நம் உணவு, உடை, உறைவிடம், குடும்ப உறவுகள், அறிவுத்திறன், சமூக நெறிகள், கல்விமுறை, எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் என்பன போன்ற வாழ்வின் பல்வேறு அம்சங்களிலும் பண்பாடு தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.[2] ஓர் இனத்தின் உயர்வு அதன் பண்பாட்டைச் சார்ந்தே அமைகிறது. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வேறுபட்ட பண்பாடு உண்டு. எனவே பல்வேறு இன மக்கள் வாழும் நாட்டில் அவரவர் தம் பண்பாடுகள் பாதுகாக்கப்படவேண்டும்.

## கல்வி

**“கல்வி என்பது உலகை மாற்றும் அதிவலிமையான ஆயதம்”.**

**(நெல்சன் மண்டேலா)**

அறியாமையை நீக்கி நம் அறிவை விரிவுபடுத்தும் அரிய புதையலே கல்வி. கல்விக்கு அழிவே இல்லை என்பதை,

**“வெள்ளத்தால் அழியாது**
**வெந்தழலால் வேகாது**
**வேந்தராலும் கொள்ளத்தான் இயலாது**
**கொடுத்தாலும் குறையாது**
**கொடிய தீய கள்ளத்தார் எவராலும்**
**களவாட முடியாது கல்வி”** - என்ற கவிவரிகள் உணர்த்துகிறது.

இறைக்க இறைக்க ஊறும் நீர் போல கல்விச் செல்வம் அள்ள அள்ள குறையாது என்பதை

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத் தூறும் அறிவு - (குறள்-396)**

என புலப்படுத்துகிறார் வள்ளுவர்.

இளமை முதல் இறப்பு வரை இடைவிடாது கல்வி கற்றாலும் ஒருவனால் கல்வியில் முழுமை பெறமுடியாது என்பதை,

**“கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு”** என்பதன் மூலம் உணரலாம்.

**கல்வியின் சிறப்பு**

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை”. - (குறள்-400)**

ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியேயாகும். அதைத்தவிர மற்ற செல்வங்களெல்லாம் செல்வங்களாகாது என்பது வள்ளுவர் தெளிவு. வாழ்க்கையை சீர்படுத்தும் கல்வியே ஒருவருக்கு உயர் செல்வமாக அமையும் என்பது உண்மை.

ஒரு தலைமுறை கல்வி கற்றால் அ.்.து ஏழு தலைமுறைக்கும் பலன்களை தரும் என்பதை

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து”. -(குறள் -398)**

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு ஏழு தலைமுறைகளுக்கும் நன்மை தரக்கூடிய கல்வி, அறநெறி மற்றும் பண்பாடு சார்ந்த கல்வியாக இருந்தால் மானுடம் செழிக்கும்.

கல்வியானது நம் அக இருளை நீக்கி, நல்லறிவை பெருக்கி, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை பயன்களை வழங்குகின்றது.

**அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்**
**புறங்கடை நல் இசையும் நாட்டும்**
**உறும்கவல் ஒன்று**
**உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின்**
**உளங்கு இல்லை**
**சிற்றுயிர்க்கு உற்ற துணை - (நீதி நெறி விளக்கம்,குமரகுருபரர்)**

அறம், பொருள், இன்பம் எனும் வழிகளின் ஊடே மனிதன் வீடுபேறு என்னும் முக்தி நிலையை அடைய முடியும். மேலும் கல்வி கற்பவர்களுக்கு நிலைத்த புகழும், கவலை ஏற்படும் போது அதிலிருந்து மீள்வதற்கு உரிய வழியாகவும், மனிதனுக்கு உந்து சக்தியாகவும் கல்வி அமைவதை அறியலாம்.

**பண்பாட்டுக் கல்வி**

**வெறும் கல்வி தேடலுக்கு மட்டும் விடையளிக்கும். ஆனால்**
**பண்பாடு மனிதனின் மகத்துவத்தை உணர வைக்கும்**

என்பதும்

**வாழ்க்கைக்காக கல்வி**
**வாழ்க்கை மூலம் கல்வி**
**வாழ்க்கை முழுவதும் கல்வி என்று அமைய வேண்டும் - (மகாத்மா காந்தி)**

வாழுகின்ற வாழ்க்கையின் விழுமியங்களே பண்பாடாகவும், பண்பாட்டுக் கல்வியாகவும் உருப் பெறுகிறது. மனிதனை பண்படுத்தும் கல்வியே பண்பாட்டுக் கல்வி மனிதனுக்கு பண்பு எனும் குணத்தை வழங்கும் அமைப்பே கல்விக்கூடம். கல்விக்கூடங்கள் ஒழுக்கப் பண்புகளுடன் கூடிய கல்வியை கற்றுக் கொடுத்து குழந்தைகளிடம் முறையாக வளர்த்திருந்தால் மட்டுமே மாண்புடைய மனிதர்கள் உருவாக்கப்படுவார்கள்.[4]

**இந்தியாவின் பாரம்பரியக் கல்வி**

பழமை வாய்ந்த நம் இந்திய நாட்டில் குருகுலக் கல்வி முறையில் வேதங்கள் கற்பிக்கப்பட்டன. இயல்பாக இயற்கையோடு இணைந்த வாழ்வை வேதங்கள் மக்களுக்கு போதித்தன. அறிவில் முழுமைப்பேறு அடைவதே கல்வியின் முக்கிய நோக்கமாக இருந்தது. வேதங்களைக் குருவின் வழியாக கற்றுத் தேர்ந்து, அதன் வழி நடந்து முழுமைப்பேறு அடைவதே பிறப்பின் நோக்கமாக வலியுறுத்தப்பட்டது.

வேத காலக் கல்வி முறையில் வாழ்க்கை நெறி, நற்செயல், தீயசெயல், இயற்கை பற்றிய அறிவு, அண்டம், பிரபஞ்சம், ஆன்மா, உயிர், பிரம்மம், துறவு, புலன்களின் கட்டுப்பாடு, உடல்நலம், கடவுள் வழிபாடு, தர்மம், ஒழுக்கம், அறிவு நுட்பம், கலைகள், பணிவு, ஜீவகாருண்யம், தற்காப்புக் கலை, தியானம், தொழிலறிவு, யோகம் போன்ற வாழ்வியல் படிமங்கள் தகுதியான குருவின் மூலம் போதிக்கப்பட்டன.

மேலும் வேதங்களின் சாரத்தை உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், இதிகாசங்கள் மூலம் பல ஞானிகள் தெளிவாக விளக்கியுள்ளார்கள். மக்களை நல்வழிப்படுத்த, வேதகாலக் கல்விமுறை பெரிதும் உதவியாக இருந்தது. இதனால் மக்களிடையே தீயசெயல்கள் குறைந்து நற்செயல்களே மிகுந்து காணப்பட்டன. ஆனால் இன்றைய நிலை அவ்வாறில்லை

**பண்பாட்டுக் கல்வியின் அவசியம்**
**அரிச்சுவடியைவிட குணத்தின் உருவாக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்**
**- (மகாத்மா காந்தி)**
**நமது கல்வி விரல்களைத்தான் வேலை வாங்குகிறதே தவிர**

**மூளையையும் மனசையும் முழுமையாக்கவில்லை**

**- (வைரமுத்து)**

காலத்தால், சூழ்நிலையால், தேவைகளினால் ஆற்றல்படுத்தப்பட்ட மனித இனம் பேராசை கொண்டு அடிப்படை தேவைகளுக்கும் மேல் சேமிப்பு என்ற பெயரில் பொருள் சேர்த்தது. வணிக ரீதியில் இருந்த இச்செயல்கள் தற்போது கல்வித் துறையிலும் நுழைந்து ஆட்சி செய்கிறது. இதனால் மானுட வாழ்க்கையின் ஒழுக்கத்திற்கும், எல்லைகளுக்கும், பிறருக்கு தீங்கு விளைவிக்காமை என்ற நிலையை கடந்து சுயநலம் ஆட்கொண்டுவிட்டது. அறநெறியில் பொருள் என்பது போய் எப்படியும் வருமானம் ஈட்டலாம் என்று மாறியது. இதனால் அறிவு முதிர்ச்சி பெற்ற மூதாதையர்கள் காலம்காலமாக தாங்கள் கடைபிடித்து வந்த பழக்கங்கள், வழக்கங்கள் என்னும் பண்பாட்டுக் கல்வியை பிரித்து பணம் ஈட்டும் கல்வியாக இன்றைய சமுதாயம் மாற்றிவிட்டது.

மதிப்பெண்களைவிட மனிதப் பண்புகளுக்கு முக்கியத்துவம் தரும் கல்வியே சிறந்த கல்வி. ஆனால் தற்போது கல்விக் கூடங்களில் அதிக மதிப்பெண்கள் பெறுவதே முக்கிய நோக்கமாக இருக்கிறது. மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் பாடம் அவர்களுக்கு முழுமையாக புரிகிறதா, இல்லையா என்பது பற்றி கவலையின்றி அதனை அப்படியே மனப்பாடம் செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு இன்றைய மாணவர்கள் தள்ளப்படுகிறார்கள். இதனால் மாணவர்களுக்கு மனதளவில் எவ்வித முன்னேற்றமும் கிடைப்பதில்லை.

[5]பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு, பொதுஅறிவு, தேசபக்தி, சமூகப்பற்று, நல்ல குடிமக்களுக்கான நற்பண்புகள், தனிமனித ஒழுக்கம், கண்ணியம், சுயமதிப்பு, தலைமை பண்புகள், தனித்திறமைகள் மேம்பாடு, ஒற்றுமையுடன் வாழ்தல், சமூக அக்கறை போன்ற வாழ்வியல் நெறிகளை கைத்தேர்ந்த திறமையான ஆசிரியர்கள் கொண்டு கற்றுத் தர வேண்டியது நம் தலையாய கடமை. இம்மாதிரியான வாழ்க்கைக் கல்வி கிடைக்க பெறாமல் போனதால்தான் இன்றைய இளம் தலைமுறையினர் தீய பழக்கங்களுக்கு அடிமையாகி தற்கொலை, களவு, கற்பழிப்பு, கொலை போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

வணிக நோக்கில் வெறும் மதிப்பெண்களுக்காகவும், பட்டங்களுக்காகவும் கல்வியை புகட்டாமல், மாணவர்களுக்கு வாழ்வியல் நெறிமுறைகளை உணர்த்தி அதன் வழி நடக்க செய்யும் கல்வி முறையே இக்காலத்தின் அவசர தேவையாக உள்ளது. நமது பண்பாட்டின் அரிய கருத்துக்களை அடுத்த தலைமுறைக்கு முறையாக எடுத்துச் செல்லாததன் விளைவே சரிவை சந்திக்கும் காரணியாகிவிட்டது. எனவே பண்பாடு சார்ந்த கல்வியை பள்ளி, கல்லூரிகளில் கட்டாயமாக்கப்பட்டு மாணவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

## பண்பாட்டு கல்வியின் அரிய பயன்கள்

**கல்வியின் நோக்கம் மாணவர்களுடைய நல்லொழுக்கத்தையும்இ பண்புகளையும் வளர்த்தலாகும்**

**- (அரிஸ்டாட்டில்)**

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன் - (குறள்-996)**

நற்பண்புகள் உடையவர்களாலேயே உலகம் நிலைக்கிறது. இதில் சிதறலோ, சிதைவோ ஏற்பட்டால் பண்புகள் குறைந்து ஓர் இனத்தின் சரிவு துவங்குகிறது. இதனையே வள்ளுவனார் மண்ணுக்குள் மாண்பை புதைக்கிறார்.

பண்பாட்டுக் கல்வியை வளர்த்தால் தனிமனித ஒழுக்கம் மேம்பட்டு நற்பண்புகளுடன் இளைய சமுதயத்தினர் வாழ்வர். இளைஞர்களின் சுய அறிவு விரிவு பெற்று, சவால்களை எதிர்கொள்ளும் திறன் பெறுவர். மேலும் சக மனிதர்களோடு இணைந்து செயலாற்றும் இணக்கம் பெற்று, வெற்றி தோல்விகளை சமமாக எண்ணிடும் குணத்தில் நிலைத்து ஓங்குவர். ஆளமை, சகிப்புத்தன்மை, துணிச்சல் போன்றன மேலோங்கி வாழ்க்கை தரத்தோடு வாழ்வின் உயரிய நோக்கத்தை அடைவர்.

## முடிவுரை

மாறுபட்ட கல்விச் சூழலால் சமுதாயத்தில் இன்பம் என்பதே மாறி, துன்பமே மிகுதியாக கொண்டது. சூடுபட்டும் திருத்திக் கொள்ள விழையாமல் துன்பங்களிடையே மட்டுமே சூழன்று கொண்டுள்ளது. ஆனால் குறைகளை கண்டும், திருத்திக் கொள்ள மனமின்றி மிரளுகின்றது. இத்தகைய சூழ்நிலை நீள்வதால்தான் சட்டங்களுக்குப் புறம்பான செயல்களையும், அதனால் ஏற்படும் விளைவுகளை துன்பங்களாகவும், அறிவினை மயக்கும் மந்த நிலையினையும் அடைகிறோம். எனவே நல்லனவற்றை கொடுத்த நமது பாரம்பரிய பண்புகளை கொண்ட பெட்டகமான பண்பாட்டுக் கல்வியை நாம் பின்பற்றினால் மட்டுமே மனிதம் சிறக்கும். ஒழுக்கம் மேலோங்கும். சமுதாயம் தழைக்கும். இன்பம் பொங்கும். இதுவே இயற்கையோடு இணைந்த பண்பாட்டுக் கல்வியின் பண்புகளாகும்.

## துணைநின்ற நூல்களும், வலை தளங்களும்

1. www.ta.vikaspedia.in
2. https://tamil.oneindia.com/cj/puniyameen/2009/0521/worldculturalday.html
3. புலவர் அ.மாணிக்கம், திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 1996> ப.எண். 80-81> 200-201.
4. www.tamilvu.org/courses/degree/c012253.html.
5. www.siragu.com/தற்காலக்-கல்வி-முறை.்.பகுதி 9